[2nd November 1962

THE HON. SRI R. VENKATARAMAN : A statement [a] is placed on the table of the House.

திரு. எம். எஸ். செல்வராஜன்: கனம் அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய பதிலிலிருந்து ஏழை எளிய மாணவர்களுக்கு கல்வி வசதிக்குக் கடன் அளிப்பதற்கு உரிய பரிசிலனை நடந்து கொண்டிருப்பதாகத் தெரிகிறது. அந்தப் பரிசிலனையின் முடிவு சுமாராக எவ்வளவு காலத்திற்குள் எடுத்துக் கொள்ளப்படும்? இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் இந்தத் திட்டம் சேர்க்கப்பட்டிருப்பதின் காரணமாக, அவசரமாக இதற்கு என்ன ஏற்பாடு செய்யப்படும்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: பரிசீலனை முடிந்து உத்தரவும் பிறப்பித்தாகிவிட்டது. இந்தப் பதில் தயாரிக்கப்படும் காலத்தில், அது பரிசீலனையில் இருந்தது.

திரு எம். எஸ். செல்வராஜன்: சாதாரணமாக இது போன்ற சலுகைகளுக்கு உரிய பாரங்கள் காலாகாலத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு கிடைக்கவில்லை என்பது பற்றி கனம் அமைச்சர் அவர்களுக்கு புகார் வந்திருக்கிறதா? எந்த இலாகா அதிகாரிகளுக்கு இதற்குரிய பாரத்தைப் பெறுவதற்கு விண்ணப்பித்துக் கொள்ளவேண்டும். அதற்குரிய நடைமுறை என்ன என்பதை கனம் அமைச்சர் அவர்கள் தெரியப்படுத்துவார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: சர்க்காரிடம் பாரங்கள் கிடைக்கவில்லை என்று புகார் வரவில்லை. அந்த பாரங்கள் எங்கு கிடைக்கவில்லை என்று எழுதினால், உடனடியாகக் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

தி. மு. க. மறியல்.

*1082 கேள்வி.—திரு ர. ஜீவரத்னம்: கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1962-ம் ஆண்டு ஜூலை மாதம் 19-ம் தேதியில் வேலூரில் நடந்த தி.மு.க. கலவரத்தில் பங்குகொண்டதற்காக சர்க்கார் ஊழியர்கள் யாரேனும் கைது செய்யப்பட்டிருக்கிறார்களா?

(இ) அப்படியானால், அவர்கள் எந்த இலாகாவைச் சேர்ந்தவர்கள்?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: (அ) வேலூரில் அரசாங்க ஊழியர் எவரும் கைது செய்யப்படவில்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை?

*1083 Q.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) the number of M.L.As., M.L.Cs. and M.Ps respectively who were prosecuted and convicted in connection with the D.M.K. agitation in July 1962;

[a] Printed as Appendix I on pages 515–516.

2nd November 1962]

(*b*) whether any representation has been received from any Member of the Assembly for the suspension of the sentence to enable them to attend meetings of the Select Committees; and

(*c*) if so, the action taken thereon?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) Eighteen M.L.As. one M.L.C. and four M.Ps. were proescuted in connection with the Dravida Munnetra Kazhagam agitation on 19th July 1962, of whom, 16 M. L. As. one M. L. C. and 4 M. Ps. were convicted.

(*b*) Sri K. S. Mani, M.L.A., who is a member of the Joint Select Committee on the Madras Iruvaram Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Bill, 1962, requested that he might be released on parole to attend the meetings of the Committee in Madras on 16th, 17th and 18th August 1962.

(*c*) The Government declined to accede to his request.

திரு மீ. கலியாணசுந்தரம்: இன்னும் எவ்வளவு சட்டமன்ற உறுப்பினர்கள் சிறையில் இருந்து வருகிறார்கள்? நாட்டிலே அரசியலில் ஏற்பட்டிருக்கக்கூடிய மாறுதலை உத்தேசித்தும், திராவிட முன்னேற்றக் கழகத்தினர் கொள்கையில் ஏற்பட்டிருக்கக்கூடிய மாறுதலை உத்தேசித்தும் அவர்களை விடுதலை செய்யும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா?

கனம் திரு எம். பக்தவத்சலம்: திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கையில் மாறுதல் ஏற்பட்டிருந்தால், அதை நான் மகிழ்ச்சியோடு வரவேற்பேன். அதை எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூறவேண்டும். கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் அவர்கள் ஒரு காலத்தில் அவர்கள் சார்பாக கூறி இருக்கக்கூடிய நிலையில் இருந்திருக்கலாம். இன்றைக்கு அவர் அந்த நிலையில் இல்லை. (சிரிப்பு) இன்னும் மற்றவர்கள் சிறையில் இருக்கிறார்களா, எத்தனை பேர்கள் இருக்கிறார்கள், எப்பொழுது விடுதலை செய்யப்படுவார்கள் என்பதைப்பற்றி என்னிடம் தகவல் இல்லை. மற்றும் அவர்களை முன்னதாக விடுதலை செய்வது என்பது பற்றி தனிக் கேள்வி வேண்டும்.

திரு. மு. கருணாநிதி: பப்ளிக் அக்கௌண்ட்ஸ் கமிட்டித் தலைவராக இருக்கிற எதிர்க்கட்சித் தலைவர் திரு. நெடுஞ்செழியன் அவர்கள் அந்தக் கமிட்டியினுடைய முதல் கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு வரவேண்டும் என்று எழுதியிருந்த மனு என்ன ஆயிற்று? அது நிராகரிக்கப்பட்டது என்றால், என்ன காரணம்?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: எதிர்க்கட்சித் தலைவர் திரு. நெடுஞ்செழியன் அவர்கள் அரசாங்கத்திற்கு அம்மாதிரி எழுதவில்லை. பப்ளிக் அக்கௌண்ட்ஸ் கமிட்டிக் கூட்டத்திற்கு வரவேண்டுமென்று தங்களுக்கு அவர் எழுதியிருந்தார்கள். அதைத் தாங்கள் அரசாங்கத்திற்கு அனுப்பியிருந்தீர்கள். அதைப் பரிசிலனை செய்து பார்த்ததிலே, பெரோலில் விடுவதற்கு இது வரையில் இது ஒரு ஏற்றுக்கொள்ளப்பட்ட காரணம் அல்ல என்பதினால், அந்த வேண்டுகோள் அங்கீகரிக்கப்படவில்லை.

[2nd November 1962

திரு. டி. கார்ச்சா கவுடர் : கைது செய்யப்பட்ட எம்.எல்.ஏ., எம்.எல்.ஸி-க்களில் எத்தனை பேர்கள் 'தாங்கள் மறியலில் கலந்து கொள்ளவில்லை, வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தோம்' என்று கூறியிருக்கிறார்கள்? அவர்களுடைய பெயர்களை அறிவிக்க முடியுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அது பற்றி என்னிடம் தகவல் இல்லை.

MR. SPEAKER : The hon. Member Sri T. Karcha Gowder, must ask the Court about this.

* 1084 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Finance be pleased to state the total number of employees who abstained from work in all Government offices due to the picketing organized by D.M.K. on 19th July 1962?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The information is not available.

* 1085 கேள்வி.—திரு. டி. கார்ச்சா கவுடர்: கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1962-ம் ஆண்டு ஜுலை மாதம் 19-ந் தேதியன்று நம் மாநிலத்தில் நடந்த திராவிட முன்னேற்றக் கழக மறியலில் கலந்து கொண்டதாக அரசாங்க ஊழியர்கள் எவரேனும் கைது செய்யப்பட்டார்களா?

(இ) அப்படியானால் எத்தனை பேர்?

(உ) இவர்களில் எத்தனை பேருக்கு வருத்தம் தெரிவித்துக் கொண்டதன்பேரில் மன்னிப்பு அளிக்கப்பட்டது?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ) ஆம்; ஐயா.

(இ) மொத்தம் ஏழு ஊழியர்கள் கைது செய்யப்பட்டனர்—மூவர் மறியலுக்காக; நால்வர் 151-வது பிரிவின் கீழ், காவலில் வைக்கப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டனர்.

(உ) முதல் மூவரில் ஒருவரும் மன்னிப்பின் பேரில் விடுதலை செய்யப்படவில்லை.

திரு. டி. கார்ச்சா கவுடர் : கைது செய்யப்பட்ட அரசாங்க ஊழியர்களின் பேரில் எந்த விதமான நடவடிக்கை எடுப்பதாக அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எந்த நடவடிக்கை என்று நான் விடையின் மூலம் கூறுவதற்கில்லை. தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. இராம. அரங்கண்ணல் : சென்னையிலே நடந்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் மறியலின்போது, போலீஸார் அத்து மீறிய வகையில் நடந்த நேரத்தில் வேடிக்கை பார்க்கச் சென்ற பல பேர்கள் கைது செய்யப்பட்டது உண்மையா? அதிலே ஒருவர்